இன்றைய செய்தி நாளைய வரலாறு

முரசொலி

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

ஞாயிற்றுக்கிழமை 04.10.2026

தி.மு.க., அ.தி.மு.க. ஆக்ஸிஜனில் விஜய்!

தனது ஆட்சியின் சாதனைகளைச் சொல்லி வாக்குக் கேட்க துப்பு இல்லாத விஜய், அடுத்தவர்களைப் பற்றிய அவதூறுகளின் மூலமாக காலம் தள்ளப்பார்க்கிறார். நேற்றைய தினம் தாராபுரத்தில் அவர் ஆற்றிய உரையும் தரங்கெட்ட உரையாகவே இருந்தது.

தி.மு.க.வும் அ.தி.மு.க.வும் கூட்டணி சேரப் பார்த்தது, இதைச் செய்யலாமா, இது எம்.ஜி.ஆருக்கும், ஜெயலலிதாவுக்கும் செய்யும் துரோகமல்லவா என்று ஏதோ அரசியல் ஞானியைப் போல பேசினார் விஜய். அந்தக் கூட்டத்தில் அவர் இரண்டு கட்சிகள் மீது வைத்த மிகப்பெரிய விமர்சனமே இதுதான்.

அந்த இரண்டு கட்சிகளையும் விமர்சிக்க தனக்கு யோக்கியதை இருக்கிறதா என்பதை அவர் நினைத்துப் பார்க்க வேண்டும்.

118 இடங்களைக் கைப்பற்றி அவர் த.வெ.க.வை தனிப்பெரும்பான்மை கட்சியாகக் காட்டி ஆட்சி அமைக்கவில்லை. திராவிட முன்னேற்றக் கழகக் கூட்டணியில் நின்று வெற்றி பெற்ற காங்கிரஸ் கட்சியின் தயவால், விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் தயவால், இந்திய யூனியன் முஸ்லிம் லீக் கட்சியின் தயவால், இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தயவால், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் தயவால்தான் முதலமைச்சர் நாற்காலியில் விஜய் அமர்ந்துள்ளார். இவர்களில் எந்தக் கட்சி தனது ஆதரவை திரும்பப் பெற்றாலும் விஜய் வீழ்ந்துவிடுவார். இதனை அவர் முதலில் மனதில் வைக்க வேண்டும்.

விஜய் குதிரை பேரம் நடத்தியதற்கான ஆதாரமாக வைகோவின் பேட்டிகள் இருக்கின்றன. 'ம.தி.மு.க. உறுப்பினர்கள் வந்திருந்தால் அமைச்சர்கள் ஆகி இருக்கலாம்' என்று அமைச்சர் ஆதவ் அர்ஜுனா சொல்லி இருப்பதும் வைகோ சொன்னதற்கு கூடுதல் ஆதாரமே!

எனவே, 'யார் தயவாலும் நான் ஆட்சியில் இல்லை, மக்கள் தயவால் நான் முதலமைச்சர் ஆகி இருக்கிறேன்' என்று சொல்வதை விஜய் நிறுத்த வேண்டும். அவ்வளவு ரோஷம் இருந்திருந்தால் தி.மு.க. கூட்டணியில் வென்றவர் ஆதரவை வாங்கி இருக்கக் கூடாது. வெட்கமே இல்லாமல் அந்தக் கட்சி அலுவலகங்களுக்குச் சென்றபோது, இதை எல்லாம் சிந்தித்திருக்க வேண்டும்.

இவை போதாது என்று டி.டி.வி. தினகரன் கட்சியைச் சேர்ந்த உறுப்பினரை குதிரை பேரம் நடத்தி அவரையும் தனக்கு வாக்களிக்க வைத்தார் விஜய். இது தொடர்பான புகார் கிண்டி காவல் நிலையத்திலும் இருக்கிறது. ஆளுநர் முன்னாலும் இருக்கிறது என்பதை விஜய் மறந்து விட வேண்டாம்.

அ.தி.மு.க.வை விமர்சிக்கிறார் விஜய். அ.தி.மு.க.வைச் சேர்ந்த 25 பேரின் வாக்குகளை வாங்கித்தான் அவரது ஆட்சிக்கு ஆதரவு 144 என்று சட்டசபையில் நிரூபித்தார் விஜய். அதனை அவர் மறந்து விட்டாரா? தனக்கு ஆதரவு தந்த காங்கிரஸ், விடுதலைச் சிறுத்தைகள், கம்யூனிஸ்ட்டுகள், முஸ்லிம் லீக்கையும் நம்பாமல் அ.தி.மு.க.வினருடன் பேரம் பேசினார் விஜய். அந்தக் கட்சியை உடைக்கத் திட்டமிட்டார். 33 பேர் வரை உடைக்கலாம் என்று பார்த்தார். மானத்தைப் பற்றி கவலைப்படாமல் சி.வி.சண்முகம் வீட்டுக்குப் போனார். மந்திரி தருகிறேன், வாரியம் தருகிறேன் என்று ஏமாற்றினார். அதையும் நம்பி 25 பேர் போய் வாக்களித்தார்கள். இரட்டை இலையில் வென்றவர்கள் 25 பேர் ஆதரவுடன்தான் அவர் முதலமைச்சர் நாற்காலியை நிலை நிறுத்தினார்.

இவரின் யோக்கியதை தெரிந்து 20 பேர் திரும்பினார்கள். அதில் ஐவருடன் குதிரை பேரம் நடத்தினார் விஜய். 'நீங்கள் ராஜினாமா செய்யுங்கள், அங்கு இடைத்தேர்தல் வந்தால் உங்களையே வேட்பாளராக அறிவிக்கிறேன்' என்பதுதான் பேரம். அதனடிப்படையில் ராஜினாமா செய்த மதுராந்தகம், தாராபுரத்துக்கு இடைத்தேர்தல் நடக்கிறது. கரூர் விஜயபாஸ்கரும், விராலிமலை விஜயபாஸ்கரும், அம்பாசமுத்திரம் இசக்கி சுப்பையாவும் காத்துக் கிடக்கிறார்கள்.

விஜய்க்காக பதவி விலகியவர்கள் அனைவரும் இரட்டை இலையில் வென்றவர்கள். இரட்டை இலையில் வென்றவர்களை தனது சுயநலத்துக்காக பதவி விலக வைத்தது கேவலம் இல்லையா? தூய சக்தி பார்க்கும் வேலையா இது? 'மற்றும் பலர்' என்று சொல்கிறாரே விஜய். அந்த 'மற்றும் பலரை' நம்பித்தான் அவர் ஆட்சியும் நடக்கிறது. அவரது பதவியும் நிலைக்கிறது. அவர்களை நம்பித்தான் பதவியைத் தக்க வைக்கவும் நினைக்கிறார் விஜய்.

இந்த 'மற்றும் பலரோடு'தான் முதலில் விஜய் பேச்சுவார்த்தை நடத்தினார் என்பதை மறந்து விட்டாரா? தேர்தல் முடிவுகள் வெளியான இரவு அன்று 'லாட்டரி' மார்ட்டின் மனைவியும் அ.தி.மு.க. சட்டமன்ற உறுப்பினருமான லீமா ரோஸ் மார்ட்டின் ஊடகங்களுக்குப் பேட்டி அளித்தார். அவரது செல்வாக்கை யாருக்கும் நினைவூட்டத் தேவையில்லை. அவரது மருமகன்தான் ஆதவ் அர்ஜுன். எனவே அ.தி.மு.க. - த.வெ.க. ஆகிய இரண்டு கட்சிகளுக்கும் மீடியேட்டராக அவர் இருந்துள்ளார்.

"பேச்சுவார்த்தை நடந்து கொண்டுள்ளது. அந்தப் பேச்சுவார்த்தை நல்லபடியாக நடக்கும். த.வெ.க.வுக்கும் எடப்பாடி அண்ணனுக்கும் பேச்சுவார்த்தை நடந்து கொண்டிருக்கிறது" என்று சொன்னவர் லீமா ரோஸ்.

"107 தொகுதிகள் மட்டுமே உள்ளதால் விஜய்யால் ஆட்சி அமைக்க முடியாது. எனவே த.வெ.க. ஆதரவுடன் கூட்டணித் தலைவரான எடப்பாடி பழனிசாமியை முதலமைச்சராக்க முயன்றோம்" என்று டி.டி.வி. தினகரனும் பின்னர் பேட்டி அளித்தார்.

இப்படி அ.தி.மு.க.வுடன் பேச்சுவார்த்தை நடத்தியவர் தான் விஜய். அவர் இன்று மகா யோக்கியரைப் போல பேசுவது கேவலமாக இருக்கிறது. இதை எல்லாம் அவர் மறக்கலாம். மக்கள் மறக்க மாட்டார்கள்.

தி.மு.க. கூட்டணிக் கட்சிகள் தயவால் ஆட்சி அமைத்து, அ.தி.மு.க.வினருடன் குதிரை பேரம் நடத்தி அதனைத் தக்க வைத்து, தன்னை வழக்குகளில் இருந்து காப்பாற்றிக் கொள்ள பா.ஜ.க.வுக்கும் பல்லக்குத் தூக்கி பச்சோந்தித் தனத்தை தினமும் காட்டி வாழ்ந்து வரும் விஜய்க்கு திராவிட முன்னேற்றக் கழகத்தையோ, அதன் பெருமைமிகு தலைவரையோ பெயரைச் சொல்வதற்குக் கூட அருகதை இல்லை.

ஜெம் வீரமணி வழக்கு: 2 அமைச்சர்கள் —

முதல்வருக்கு சம்மன் அனுப்பி விசாரிக்க உத்தரவிட வேண்டும்!

சென்னை உயர்நீதிமன்றத்தில் டி.ஆர்.பாலு எம்.பி. சார்பில் — மூத்த வழக்கறிஞர் ஜெ.ரவீந்திரன் மனு!

சென்னை, அக். 4-

ஜெம் வீரமணி வழக்கில் குற்றம் சாட்டப்பட்டவரை தி.மு.க. பாதுகாத்ததாகக் கூறிய முதல்வர் விஜய், அமைச்சர்கள் ஆதவ் அர்ஜுனா, சி.டி.ஆர். நிர்மல் குமார் ஆகியோருக்கு சம்மன் அனுப்பி விசாரிக்கும் படி, சிறப்புப் புலனாய்வுக் குழுவுக்கு உத்தரவிடக் கோரி தி.மு.க. பொருளாளரும், மக்களவைக் கழகக் குழுத் தலைவருமான டி.ஆர்.பாலு சென்னை உயர் நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்துள்ளார்.

டி.ஆர்.பாலு தரப்பில் மூத்த வழக்கறிஞர் ஜெ.ரவீந்திரன் தாக்கல் செய்த மனுவில், போக்சோ வழக்கில், ஜெம் கிரானைட் வீர மணியை தி.மு.க. பாதுகாத்ததாக முதலமைச்சர் விஜய்யும், வீரமணியை தி.மு.க. பாதுகாத்ததோடு அவர் மீதான வழக்கையும் தவறாக முடித்து வைத்ததாக அமைச்சர் ஆதவ் அர்ஜுனாவும் வீரமணியைப் பாதுகாப்பதற்காகத் திராவிட முன்னேற்றக் கழகம் அவரிடமிருந்து 500 கோடி ரூபாய் பெற்றதாக சட்ட அமைச்சர் நிர்மல் குமாரும் குற்றஞ் சாட்டியுள்ளனர்.

மாநிலத்தின் முதலமைச்சரும், இரு அமைச்சர்களும் முன்வைத்துள்ள இக்குற்றச்சாட்டுகள் சிறப்புப் புலனாய்வுக் குழுவின் விசாரணையுடன் நேரடியாகத் தொடர்புடையவை என்பதால் இக்குற்றச்சாட்டுகளுக்கு அடிப்படையான ஆதாரங்கள், ஆவணங்கள் மற்றும் தகவல்களை அவர்களிடமிருந்து பெற அவர் களுக்கு சம்மன் அனுப்பி விசாரணை நடத்த சிறப்பு புலனாய்வு குழுவுக்கு உத்தரவிடக் கோரி டி.ஆர்.பாலு சென்னை உயர் நீதிமன்றத்தில் மனுதாக்கல் செய்துள்ளார்.

அந்த மனுவில், முதல்வர், அமைச்சர்கள் தெரிவித்த குற்றச்சாட்டுகளுக்கு ஆதாரங்கள் உள்ளனவா? இருந்தால், அவற்றை இதுவரை விசாரணை அதிகாரிகளிடம் ஒப்படைக்காதது ஏன்? விசாரணை தொடர்பான ரகசிய ஆவணங்கள் இவர்களுக்கு அனுமதியின்றிக் கிடைத்துள்ளனவா? அவற்றிலுள்ள தகவல்கள் பொதுவெளியில் வெளியிடப்பட்டுள்ளனவா ஆகிய கேள்வி களுக்கும் விடை காண வேண்டியுள்ளது.

சிறுமிகள் பாதிக்கப்பட்டுள்ள இவ்வழக்கில், ஆதாரங்கள் அழிக்கப்படுவதற்கோ, மறைக்கப்படுவதற்கோ இடமளிக்காமல் அவற்றை உடனடியாகச் சேகரிக்க வேண்டும். பொய் குற்றச்சாட்டுகள் முன்வைக்கப் பட்டிருந்தாலோ, சட்டப்படி தெரிவிக்க வேண்டிய தகவல்கள் மறைக்கப்பட்டிருந்தாலோ, விசாரணை ரகசியங்கள் அனுமதியின்றி வெளியிடப்பட்டிருந்தாலோ, சம்பந்தப்பட்டவர்கள் மீது போக்சோ சட்டம் மற்றும் பாரதிய நியாய சன்ஹிதாவின் பொருந்தக்கூடிய பிரிவுகளின்கீழ் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனக் கூறப்பட்டுள்ளது. இந்த வழக்கு விரைவில் விசாரணைக்கு வரும் என எதிர்பார்க்கப் படுகிறது.

ராஜ்மோகனுக்கு வந்த போன்கால் - தாராபுரம் த.வெ.க. வேட்பாளரின் கண்ணீர்

'ஸ்வீட் ப்ரோ' விஜய்யின் ஆறுதல்.. செம்ம நடிப்பு!

கனிமொழி இராஜாத்தி கருணாநிதி எம்.பி. விளாசல்!

சென்னை, அக். 4 -

தாராபுரம் பிரச்சார கூட்டத்தில் த.வெ.க. வேட்பாளர் சத்யபாமா கண்ணீர்விட்டதும் முதல்வர் விஜய் ஆறுதல் கூறியதும் "நடிப்பு" எனக் குறிப்பிட்டுள்ளார், தி.மு.க. துணைப் பொதுச்செயலாளர் கனிமொழி இராஜாத்தி கருணாநிதி எம்.பி.

மதுராந்தகத்தில் தி.மு.க. வேட்பாளர் பரந்தாமனை ஆதரித்து பிரச்சாரம் செய்து கனிமொழி பேசியதாவது:-

நான் விஜய்யை அதிகம் திட்ட முடியாது.. என் அண்ணனை அவர் அங்கிள் என கூறியிருக்கிறார்.. அதனால் அவரை 'அன்புத் தம்பி' என்று அழைக்கிறேன்.. அவர் 'ஸ்வீட் ப்ரோ'.

இன்றைக்கு மேடையில்.. தாராபுரத்தில் நல்ல நாடகம் அரங்கேறியது.. இங்கே ப்ரோ விஜய் நிற்கிறார்.. பக்கத்தில் அங்கே வேட்பாளர் சத்யபாமா நிற்கிறார்.. அதைத்தாண்டி அமைச்சர் ராஜ் மோகன் நிற்கிறார்.

அந்த வேட்பாளர் சத்யபாமா, சாதாரணமாக பேசுறாங்க.. வாக்கு கேட்கிறாங்க.. ஓட்டு போடுங்கன்னு பேசுறாங்க..

திடீர்னு அமைச்சர் ராஜ்மோகனுக்கு போன் வருது.. அவர் அந்த போனை எடுத்து பேசிட்டு



கிடுகிடுன்னு வந்து.. அம்மையார் சத்யபாமா காதுகிட்ட ஏதோ ஒன்று சொல்கிறார்..

அவர் சொன்ன அடுத்த நொடி.. அந்த அம்மா கண்ணில் இருந்து கண்ணீர் வருகிறது.. ஒரு பெண் என்றும் பாராமல் என்ன என்னவோ பேசுறாங்கன்னு அழறாங்க.. கட்.. அடுத்த ஷாட்.. உடனே ப்ரோ விஜய் ஓடி வந்து சத்யபாமாவை கட்டி அணைத்து ஆறுதல் சொல்கிறார்.. இதை விட... பெரிய நடிப்பை அரசியலில் நாங்க பார்த்ததே இல்லை.. இப்படிப்பட்ட நடிகர்களை நீங்கள் அடையாளம் கண்டுகொள்ள வேண்டும்.

இவ்வாறு கனிமொழி இராஜாத்தி கருணாநிதி எம்.பி. பேசினார்.

விஜய் ஆட்சிக்கு வந்ததினுடைய மாற்றம் தமிழ்நாட்டுக்கு துர்நாற்றம்!

மதுராந்தகத்தில் கழக வேட்பாளர் இ.பரந்தாமன் சாடல்!

அச்சிறுப்பாக்கம், அக். 4 –

மதுராந்தகம் சட்டமன்றத் தொகுதி இடைத்தேர்தலில் தி.மு.க. கழகத்தின் சார்பில் வெற்றி வேட்பாளர் இ.பரந்தாமன் போட்டியிடுகிறார்.

மதுராந்தகம் சட்டமன்றத் தொகுதி இடைத்தேர்தலில் போட்டியிடும் வெற்றி வேட்பாளர்பரந்தாமன் அச்சிறுப்பாக்கம் வடக்கு ஒன்றியத்தில்உதயசூரியன் சின்னத்திற்கு தீவிர வாக்கு சேகரித்து வருகிறார்.

விழுப்புரம் வடக்கு மாவட்ட செயலாளர், முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் தலைமையில் அச்சிறுப்பாக்கம் வடக்கு ஒன்றிய செயலாளர் தம்பு முன்னிலையில் கழக வேட்பாளர் பரந்தாமன் மொறப்பாக்கம், தண்டலம், கழனிப்பாக்கம், கூடலூர், மாத்தூர் ஆகிய கிராமங்களில் உதயசூரியன் சின்னத்திற்கு தீவிர வாக்கு சேகரித்தார். வாக்கு சேகரிக்க வந்த வேட்பாளர் பரந்தாமனுக்கு கிராம மக்கள் மலர் தூவி ஆரத்தி எடுத்து உற்சாக வரவேற்பு அளித்தனர்.

அப்போது வாக்காளர்களிடத்தில் வாக்கு சேகரித்து பேசிய வேட்பாளர் பரந்தாமன் :–

உதயசூரியன் சின்னத்தில் ஓட்டு கேட்டு வந்துள்ளேன் திமுக தலைவர் மு.க.ஸ்டாலின், எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் ஆகியோரின் வேட்பாளராக நான் உங்களிடத்தில் வந்துள்ளேன். நீங்கள் அனைவரும் உதயசூரியன் சின்னத்தில் வாக்களித்து பெருவாரியான வாக்குகள் வித்தியாசத்தில் என்னை வெற்றி பெற செய்ய வேண்டும் என கேட்டுக்கொண்ட வேட்பாளர் பரந்தாமன்

ஒரு மாற்றம் வேண்டி ஆட்சிக்கு வந்து எனக்கு ஒரு வாய்ப்பு தாருங்கள் நான் நாட்டை மாற்றி முன்னேற்றி காட்டுகிறேன் என ஓட்டு கேட்டார் அவர் பஸ் மீது ஏறி நின்று பிரச்சாரம் செய்து பாட்டு பாடி டான்ஸ் ஆடி ஓட்டு கேட்டார் ஆட்சிக்கு வந்தால் மகளிர்க்கு மாதம் 2500 ரூபாயும், ஆறு சிலிண்டர் கொடுப்பதாகவும் படித்த இளைஞர்களுக்கு மாதம் 4000 ரூபாய் கொடுப்பேன் என்று சொன்னார் கொடுத்தாரா என கேள்வி எழுப்பிய வேட்பாளர் பரந்தாமன் ஆட்சிக்கு வந்து ஐந்து மாதம் ஆகிவிட்டது இன்னும் அவருக்கு அந்த நிமிடம் கிடைக்கவில்லை தேடிக் கொண்டிருக்கிறார். ஆனால் கழகத் தலைவர் மு. க. ஸ்டாலின் ஆட்சியில் மகளிர் உரிமைத் தொகை மாதாமாதம் கரெக்டாக வந்தது. முதியோர் உதவித் தொகை 100 நாள் வேலை திட்டத்தின் பணி செய்யும் பணியாளர்களுக்குபணம் கரெக்டாக வந்தது. இப்ப வருதா என்றாள் வரவில்லை. இதையெல்லாம் சட்டமன்றத்தில் பேசுவதற்கு என்னை மதுராந்தகம்சட்டமன்ற தொகுதி உறுப்பினராக தேர்வு செய்வதற்கு வாக்காளர்கள் ஆகிய நீங்கள் உதயசூரியன் சின்னத்தில் வாக்களித்து பெருவாரியான வாக்குகள் வித்தியாசத்தில் என்னை வெற்றி பெற செய்ய வேண்டும் எனகேட்டுக்கொண்ட அவர்

விஜய் ஆட்சிக்கு வந்த தன்னுடைய மாற்றம் தமிழ்நாட்டுக்கு ஏற்பட்டுள்ள துர்நாற்றம் என சாடினார்.

நிகழ்ச்சியில் முன்னாள் சட்ட மன்ற உறுப்பினர்கள் டாக்டர் மாசிலாமணி, சேது நாதன், செந்தமிழ்ச் செல்வன், மாவட்ட அவை தலைவர் டாக்டர் சேகர், தலைமை தீர்மான குழு உறுப்பினர் செஞ்சி சிவா, ஒன்றிய செயலாளர்கள் ராஜாராம், மணிமாறன் . மொடையூர் துரை, வல்லம் ஒன்றிய பெருந்தலைவர் அமுதா ரவிக்குமார், பொதுக்குழு உறுப்பினர்கள் சாந்தி ஏழுமலை, வீடூர் ரவி,விழுப்புரம் வடக்குமாவட்ட கலை இலக்கிய அணி அமைப்பாளர் செந்தில் குமார், மாவட்ட மகளிர் அணி அமைப்பாளர் திலகவதி விஜயகுமார், ஒன்றிய கவுன்சிலர் மாத்தூர் சிலம்பரசன், ஊராட்சி நிர்வாகிகள் மாத்தூர் ரவி, ராஜா, ராஜேந்திரன், பாஸ்கர், கதிரவன், கிருஷ்ண மூர்த்தி, சிதம்பரம், மனோஜ், ஜெகன், நாகப்பன், மோகன், ஒன்றிய நிர்வாகிகள்மயிலம் வடக்கு ஒன்றியம் கிஷோர், சம்சுதீன்,தீவனூர் சேகர், ரமேஷ் பிரபு, ரவி, வேலு, ஐயம்பெருமாள், காந்தி, அர்ஜுனன், உதய வாசன், மயிலம் தெற்குசசிகுமார், செல்வம், அகில்,ஒலக்கூர்மேற்கு ஒன்றிய நிர்வாகிகள் அமராவதி, திருஞான சம்பந்தம், சந்திரபாபு, முனுசாமி, ஹேமசந்திரன்உள்ளிட்ட நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

'வாட்ஸ் அப்'பில் வலம் வருவது

இம்புட்டுதாங்க தூயசக்தி அரசியல்!

ஒரே மேடை... இருவேறு காட்சிகள்!

விஜயை பார்க்க வந்த ரசிகர்கள் கூட்டம் மணிக்கணக்காக வெயிலில் காத்திருந்ததில் ஒரு பெண் மயங்கி விழுகிறார்... இதயத்துடிப்பே குறைகிறது... அவரை உடன் வந்தவர் தான் பதறியடித்து தூக்கித் தோளில் போட்டு சுமந்து நடக்கிறார்... முதலுதவிக்கு கூட வழியில்லை!

அதே மீட்டிங்கில் மேடையில்... அ.தி.மு.க.வில் போட்டியிட்டு வெற்றி பெற்று, அமைச்சர் பதவி தருகிறோம்... இத்தனை கோடி தருகிறோம் என்றெல்லாம் விலை பேசப்பட்டு, வெற்றிபெற்று சில நாட்களிலேயே வாக்களித்த மக்களையெல்லாம் முட்டாள்களாக்கி விட்டு த.வெ.க.வில் ஐக்கியமான சத்யபாமா என்ற பெண்மணி... மீண்டும் தேர்தலில் த.வெ.க. சார்பாக போட்டியிடுகிறார்... மக்களை முட்டாள்களாக்கிய அந்த பெண்மணி மேடையில்





சொல்லி வைத்தது போல பேசுகிறார்... "பெண்ணென்றுகூட பார்க்காமல் என்னை எவ்வளவு அசிங்கமா பேசணுமோ பேசுறாங்க!" எனக்கூறி போலியாக கண்ணீர் வடிப்பதுபோல் காட்சி தர. சொல்லிவைத்தது போல் முதல்வர் விஜய் அப்பெண்மணியை தேற்ற, கர்ச்சீப்பால் முகத்தை துடைக்கிறார் அப்பெண்மணி! ஓட்டுக்காக விக்டிம் ப்ளே செய்து மீண்டும் தாராபுரம் மக்களை முட்டாளாக்கும் முயற்சியை செய்கிறார்கள்!!

என்னமாதிரியான இருவேறு காட்சிகள் பாருங்கள்! "உங்க வீட்டுப் பிள்ளையா வந்திருக்கிறேன்" என்று விஜய் மேடையில் பேசி நடிக்கிறார்... மேடைக்கு கீழே யார் வீட்டுப் பிள்ளையோ மயங்கிவிழ, முதலுதவிக்கு கூட வழியில்லாமல் தோளில் தூக்கிட்டு போறாங்க! மேடையிலோ எக்கச்சக்கமா வாங்கிட்டு ஒரு பெண்மணி அழுவது போல் நடிக்க, அப்பெண்ணை தேற்றுகிறார் விஜய்!

இம்புட்டு தாங்க தூய சக்தி அரசியல்!! இதை நம்பி உங்களை நீங்களே ஏமாத்திக்காதீங்க!!